[1970 நவம்பர் 28

(b) if so, when this land was acquired and at what cost; and

(c) the reasons for keeping the land unused?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (ஆ) 0.73 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை ரூ. 1,748-க்கு 1950-ம் ஆண்டில் உரிமை பெறப்பட்டது.

(உ) இருப்புப்பாதையின் குறுக்கே செல்லும் பாதையை மாற்றியமைப்பதற்காக ரயில்வே நிர்வாகத்தாரின் ஒப்புதல் பெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் சாலையை நேர்படுத்துதல், இருப்புப்பாதையின் குறுக்கே செல்லக்கூடிய பாதையை மாற்றியமைத்தல் முதலான வேலைகளை முன்னதாக செயல் படுத்த முடியவில்லை. ரயில்வே நிர்வாகத்தாரின் ஒப்புதல் பெறப்பட்டு வேலை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி–நாகர்கோயில்–திருவனந்தபுரம் ரயில்பாதை.

* 54 வினா.—திரு. சு. துரைசாமி:
திரு. வை. சுவாமிநாதன்: } மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலிக்கும், திருவனந்தபுரத்திற்கும் நாகர்கோயில் வழியாக ரயில் பாதை அமைக்குமாறு மத்திய அரசுக்கு பரிவுரை செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்,

(இ) நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரி வரை இணைப் பாதையுடன், திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரத்திற்கு நாகர் கோயில் வழியாக புதிய இருப்புப்பாதை போடுவதற்காக போக்குவரத்து ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்திய அரசின் ரயில்வே வாரியம் ஆணையிட்டுள்ளது. இந்தப் போக்குவரத்து ஆய்வுப் பணி நிறைவேறிவருகின்றது.

திரு. சு. துரைசாமி. பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பரிசீலனை முடிந்து நடப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது மத்திய சர்க்காரின் தயவில் இருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR: May I know the priority which this scheme has been assigned by the State Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: In November last, the General Manager of the Southern Railway stated that the Railway Board had ordered to carry out a traffic survey of new

line between Trivandrum and Tirune'veli (via) Nagercoil and that the traffic survey has commenced. He requested that instructions to officers concerned be issued for co-operation.

Priority has not been assigned. But we have been pressing the Centre to take it up early.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கடந்த 20 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்களிடையே இந்தக் கோரிக்கை இருந்து வருகிறதே, இதை விரைவில் நிறைவேற்றுவதாக, பாராளுமன்ற இடைத்தேர்தல் நடந்தபொழுது ஒரு வேட்பாளர் கூறினாரே, அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டாரே. வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அவர் இதற்கு முயற்சி எடுத்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்தத் திருநெல்வேலி நாகர்கோவில் வழியாக இரயில் பாதை வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் பலமுறை மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறது. ஆனால் சுமார் ஒரு மாதகாலத்திற்கு முன் மத்திய இரயில்வே அமைச்சரவர்கள் பேசும்பொழுது 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடுகளில் எந்தப் பகுதியிலும் புதிதாக இரயில் பாதைகள் இல்லை என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். எனவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழ்நாட்டிலே அல்லது மற்ற சதர்ன் ஸ்டேட்ஸிலே புதிய பாதை அமைக்கப் போவதாகத் தெரியவில்லை. ஆகவே, இதைச் சுட்டிக்காட்டி, அவசியம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை அமல் படுத்த வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஏற்கெனவே கைவிடப்பட்ட திட்டம்தான். மறுபடியும் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளப்பட்டு ரயில்வே வாரியத்தால் சர்வேக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. நம்முடைய அரசும் அவ்வப்பொழுது வற்புறுத்தி வருகிறது.

கடலூர் துறைமுகம்.

* 55 வினா.—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுகத்தை ஒரு பெரிய துறைமுகமாக மேம்படுத்துவது தொடர்பாக மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) கடலூர் ஒரு இடைநிலைத் துறைமுகம் (Intermidiary Port) இதை மேம்பாடு செய்ய வேலை நடந்து வருகிறது. அதனை ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.